செய்தி வெளியீடு எண்: 232 நாள்: 27.03.2020

# வேளாண் விளைபொருட்களை அரசு ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்களில் சேமித்து வைப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த செய்தி வெளியீடு

தமிழகத்தில் கொரானா தாக்குதலைக் கட்டுப்படுத்திட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. விளைபொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்வதில் உள்ள பிரச்சனைகளை களைந்திடவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் தங்களை விளைபொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்லும்போது, சம்பந்தப்பட்ட **கிராம நிர்வாக அலுவலர்களிடமிருந்து உரிய சான்றினை பெற்றுச் செல்லலாம்.**

## விளைபொருட்களை பாதுகாத்து சேமித்திட கிடங்கு வசதி:

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பயன்பாட்டிற்காக நவீன சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, அவை பயன்பாட்டில் இருந்து வருகின்றன. விவசாயிகள் விளைபொருட்களை இக்கிடங்குகளில் 180 நாட்கள் வரை வைத்து பாதுகாத்திடலாம். அதிக விலை கிடைக்கப்பெறும் காலங்களில் விளைபொருட்களை கிடங்கிலிருந்து எடுத்து விற்பனை செய்திடலாம். கிடங்கு வாடகைக் கட்டணத்தை முதல் 30 நாட்களுக்கு செலுத்திட தேவையில்லை.

## பொருளீட்டுக்கடன் வசதி:

கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள விளைபொருட்களை அடமானத்தில் பேரில் அதிகபட்சம் 75 சதவீத சந்தை மதிப்பு அல்லது 3 இலட்சம் ரூபாய் இவற்றில் எது குறைவோ அந்த அளவிற்கு பொருளீட்டுக்கடனைப் பெற்றிடலாம். கடனிற்கான

கால அளவு 180 நாட்கள் ஆகும். இதற்கான வட்டி 5 சதவீதமாகும். கடனிற்கான வட்டி முதல் 30 நாட்களுக்கு செலுத்திட தேவையில்லை.

**<u>பழங்கள் மற்றும் காய்கறிகளை பாதுகாத்திட குளிர்சதனக்கிடங்கு வசதி:</u>**

பழங்கள் மற்றும் காய்கறி சாகுபடி செய்திடும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் குளிர்சாதனக்கிடங்கு வசதிகளும் அமைக்கப்பட்டு உள்ளன. விரைவில் அழுகக்கூடிய பொருட்களை இக்கிடங்குகளில் வைத்து பாதுகாத்திடலாம். மேலும் விநியோகத் தொடர் மேலாண்மை திட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள முதன்மை பதப்படுத்தும் நிலையங்களிலும் குளிர்சாதனக் கிடங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விவசாயிகள் இதனை பயன்படுத்தி விளைபொருட்களை பாதுகாத்திடலாம்.

விளைபொருட்களை விற்பனை செய்தல் மற்றும் சேமித்து வைத்தல் போன்றவைக்கு மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) கொண்டு பயன்பெறலாம். அவர்கள் தொலைபேசி எண்கள் பின்வருமாறு:

| வ.எண் | மாவட்டம் | தொலைபேசி எண் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு | 9843938301 |
| 2. | திருவள்ளூர் | 7708541376 |
| 3. | வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் | 9442580451 |
| 4. | திருவண்ணாமலை | 9361110552 |
| 5. | கடலூர் | 9486420540 |
| 6. | விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி | 9443787717 |
| 7. | சேலம் | 9443363660 |
| 8. | நாமக்கல் | 9080386024 |
| 9. | தருமபுரி | 9865815763 |
| 10. | கிருஷ்ணகிரி | 9444710229 |
| 11. | கோயம்புத்தூர் | 9003660358 |
| 12. | நீலகிரி | 9994934804 |
| 13. | ஈரோடு மற்றும் திருப்பூர் | 9443546094 |

| | | |
|---|---|---|
| 14. | திருச்சி | 7010330487 |
| 15. | கரூர் | 7305630487 |
| 16. | பெரம்பலூர் மற்றும் அரியலூர் | 8531811442 |
| 17. | தஞ்சாவூர் | 9944669922 |
| 18. | நாகப்பட்டிணம் | 9944669922 |
| 19. | திருவாரூர் | 9944669922 |
| 20. | புதுக்கோட்டை | 9443008455 |
| 21. | இராமநாதபுரம் | 9677367772 |
| 22. | சிவகங்கை | 9994621079 |
| 23. | மதுரை | 9443004662 |
| 24. | தேனி | 9442009901 |
| 25. | திண்டுக்கல் | 9786785180 |
| 26. | விருதுநகர் | 7598286370 |
| 27. | திருநெல்வேலி மற்றும் தென்காசி | 9842789906 |
| 28. | தூத்துக்குடி | 9487523498 |
| 29. | கன்னியாகுமரி | 9443432430 |

மக்களின் நலனுக்காக அரசு அறிவித்துள்ள தடை உத்தரவினால், விவசாயிகள் யாரும் சிரமப்படக்கூடாது என்பதற்காக அரசு அறிவித்துள்ள இந்த வசதியினை அனைத்து விவசாயப் பெருமக்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**